கள்ளக்குறிச்சி நகரக் கழகம் சார்பில் நான்கு முனை சந்திப்பிலும், தியாகதுருகம் ஒன்றிய, பேரூர் கழகம் சார்பில் பேருந்து நிறுத்தம் ஆகிய இரண்டு பகுதிகளில் கோடையின் வெப்பம் தணிக்கும் வகையில் நீர்மோர் பந்தலை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து, தர்பூசணி, இளநீர், நுங்கு,வெள்ளரி, மற்றும் பழச்சாறுகள், நீர் மோர் ஆகியவைகளை வழங்கினார், நிகழ்வில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட கழக செயலாளர் உதயசூரியன் எம்.எல்.ஏ, தே.மலையரசன் எம்பி ஆகியோர் உடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி வருகின்ற

2026 ஆம் ஆண்டு தேர்தலில் படுதோல்வி அடையும்!

அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

கள்ளக்குறிச்சி, ஏப்.14 - கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் அருகே வீரசோழபுரத்தில் பொதுப் பணித்துறையின் சார்பில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடக் கட்டுமானப் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறுது றைமுகங்கள் துறை அமைச் சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (12.04.2025) சனிக்கிழமை அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து செய்தியாளர்க ளைச் சந்தித்தார்.

இந்நிகழ்வில் பொதுப்ப ணித்துறை அரசு செயலா ளர் ஜெ.ஜெயகாந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந் தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன், சங்கராபு ரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரி யன், கள்ளக்குறிச்சி நாடா ளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன், உளுந்தூர் பேட்டை தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் ஏ. ஜெ.மணிக்கண்ணன் ஆகி யோர் உடனிருந்தார்கள்.

இந்த செய்தியாளர் சந் திப்பில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய் தியாளர்களிடம் தெரிவித் ததாவது:

தமிழக அரசின் உத்தர வின்படி கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழ புரத்தில் ரூ.139.41 கோடி மதிப்பீட்டில் புதிய மாவட்ட ஆட்சியரகக் கட் டடக் கட்டுமானப் பணி கள் திட்டமிட்டப்படி பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. இக்கட் டடம் 8 தளங்களைக் கொண்டு 26487.68 ச.மீ. பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டடம் மொத்தம் 39 ஏக்கரில் அமைந்துள்ளது. இதில் பூங்கா, விளையாட்டு மைதானம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ளிட்ட பிற பயன்பாட்டிற்கு ஒதுக் கப்பட்டது போக மீத முள்ள 13.50 ஏக்கர் பரப்ப ளவில் புதிய மாவட்ட ஆட்சியரகக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

புதிய மாவட்ட ஆட்சியரங்கக் கட்டடம்!

இந்த புதிய மாவட்ட ஆட்சியரகக் கட்டடம் அமைப்பதற்கு டி.டி.சி.பி அனுமதி, சுற்றுச்சூழல் அனுமதி, தீயணைப்புத் துறை அனுமதி உள்ளிட்ட அத்தியாவசிய அனுமதிகள் அனைத்தும் முறையாகப் பெறப்பட்டுள்ளது. தமிழ் நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் கள்ளக் குறிச்சி மாவட்டத்திற்கு நேரடியாக வருகை புரிந்து புதிய மாவட்ட ஆட்சியர கக் கட்டடத்தினைத் தொடங்கி வைக்க உள் ளார்கள். அந்த வகையில் புதிய மாவட்ட ஆட்சியர கக் கட்டடத்தினை எந்த மாதத்தில் திறந்து வைப் பது என்பது குறித்து இன் றையதினம் ஆய்வு மேற் கொண்டதன் அடிப்படை யில் வருகின்ற செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி பேரறி ஞர் அண்ணா பிறந்தநாள் அன்று தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களால் புதிய மாவட்ட ஆட்சியரகக் கட் டடத்தினை திறக்க உத்தே சிக்கப்பட்டுள்ளது. எனவே கட்டடப் பணிகளைத் தொடர்ந்து விரைவாக மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.புதிய மாவட்ட ஆட்சியரகக் கட் டடம் பல்வேறு நவீன வச திகளுடன் எழிலுறக் கட் டப்பட்டு வருகிறது. அதன்படி இக்கட்டடத் தில் மாவட்ட ஆட்சித்த லைவர் அறை, அரசின் பல் வேறு துறை சார்ந்த அறைகள், 600 பொதுமக் கள் அமரும் வகையில் பொதுமக்கள் குறைதீர் நாள் கூட்டரங்கம், காணொலிக் காட்சி அறை, இசேவை மையம், பாஸ் போர்ட் அலுவலகம், செய் தியாளர்களுக்கானத் தனி யறை, மின்தூக்கி வசதி உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் கட்டப் பட்டு வருகிறது.

மேலும் புதிய மாவட்ட ஆட்சியரகக் கட்டட வளா கத்தில் 250 மகிழுந்துகள், 350 இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று இக்கட்ட டம் அதிநவீன புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு பொதுப்பணித் துறையின் சார்பில் கட்டப் பட்டு வருவதுடன் சுழற்சி முறையில் 24 மணி நேர மும் பணிகள் மேற் கொள்ள அறிவுறுத்தப் பட்டு பணிகள் நடை பெற்று வருகிறது. பணிக ளைத் தரமாகவும் விரை வாகவும் முடிக்க சம்பந்தப் பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் கள்ளக்கு றிச்சி மாவட்ட புதிய ஆட் சியரகக் கட்டடத்தினை பேரறிஞர் அண்ணா அவர் கள் பிறந்த செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாடு முத லமைச்சர் அவர்களால் திறந்து வைக்க உத்தேசிக் கப்பட்டு உரிய நடவ டிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது,

மேலும் தமிழகத்தில் வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக் கின்ற சட்டமன்ற தேர்த லில் அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி படுதோல்வி அடைவது உறுதி, திராவிட மாடல் நல்லாட்சியில் இந் தியா மட்டுமல்ல உலகமே திரும்பிப் பார்க்கும் வகை யில் மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்ப டுத்தி வருவதால் மக்கள் எங்கள் பக்கம் இருக்கின்ற னர், ஆகவே தமிழக முதல் வர்,கழகத் தலைவர்,திரா விட நாயகர்,சமூக நீதிக் காவலர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையி லான திமுக கூட்டணி அமோக வெற்றி பெறும் . இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்க ளிடம் தெரிவித்தார்.

அரியலூரில் முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

அரியலூர், ஏப், 14 - அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல மைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் செந்துறை வடக்கு ஒன்றி யம் ஆர்.எஸ்.மாத்தூர் கிரா மத்தில் ஒன்றிய கழக செய லாளர் வி.எழில்மாறன் தலைமையில் நடைபெற் றது. முன்னதாக முன்னாள் மாவட்ட பிரதிநிதி இரா. கோடி வரவேற்று பேசினார்.

சி.அன்பழகன், செ.ஆசைத் தம்பி, துரை.ரவி, சத்திய பாமா புலவேந்திரன், சி. நன்னன்,மு.சபாபதி, வி. ஆறுமுகம் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

நடைபெற்ற பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலா ளர், தமிழ்நாடு அரசு போக் குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தேர்தல் பணிக்குழு செயலாளர் கம் பம் செல்வேந்திரன், கழக இளம் பேச்சாளர் அசாரு தீன் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலா ளர் சி.சந்திரசேகரன், குன் னம் சட்மன்ற தொகுதி மேற்ப்பார்வையாளர் ஏ.கே.அருண், ஆண்டிம டம் தெற்கு ஒன்றிய செய லாளர் ஆர்.கலியபெரு மாள், மாவட்ட பொறியா ளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்று நெல்லை மாநகர அ.ம.மு.க. மாவட்ட அவைத் தலைவர் சாமுவேல் பிரின்ஸ் அக்கட்சியில் இருந்து விலகி நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளரா இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். உடன் மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், விவசாயத் தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், நாங்குநேரி முன்னாள் ஒன்றிய செயலாளர் பாலச்சந்தர் ஆகியோர் உள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டம் ஆணைக்குட்டம் அணையில் ரூ.28.20 கோடி மதிப்பில் புணரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வி.ப.ஜெயசீலன் , தலைமைமில் , விருதநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் , சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் , நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார் . உடன் வர்த்தக அணி வனராஜ், சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன், விருதுநகர் நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், துணைச் செயலாளர் ராமமூர்த்தி, சிவகாசி பகுதிச் செயலாளர் காளிராஜன், பொதுக் குழு உறுப்பினர் சுதாகர், இளைஞர் அணி கார்த்தி, முன்னாள் ஒன்றிய தலைவர் சுமதி ராஜசேகரன், ஒன்றிய துணைச் செயலாளர் குருசாமி ஆகியோர் இருந்தனர்.

இன்று அம்பேத்கர் பிறந்த நாள்: ஆர்.எஸ்.பாரதி தலைமையில்!

சென்னை அண்ணா அறிவாலயத்தில் அண்ணல் அம்பேத்கர் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை- "சமத்துவ நாள்" உறுதிமொழி!

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

சென்னை, ஏப். 14 - அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளினை முன் னிட்டு இன்று (ஏப்ரல் - 14) சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார் பில்கழக அமைப்புச் செய லாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரி யாதை செய்து "சமத்துவ நாள்" உறுதிமொழி ஏற் கின்றனர்.

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை வரு மாறு:

"வடக்கில் உதித்த சமத் துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்" என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்து, அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அண்ணல் அம் பேத்கர் பிறந்த நாள் அன் றும் அன்னாரது திருவுரு வப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து, "சமத்து வநாள் உறுதிமொழி" ஏற் றுக் கொண்டு வரப்படுகி றது. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டக் கழக அலுவலகங்களிலும் அண் ணல் அம்பேத்கர் அவர்க ளின் திருவுருவப் படத் திற்கு அமைச்சர் பெரு மக்கள், மாவட்டச் செய லாளர்கள், நிர்வாகிகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட் சிப் பிரதிநிதிகள் உள் ளிட்ட கழகத்தினர் மலர் தூவி மரியாதை செலுத்தி "சமத்துவ நாள்" உறுதிமொ ழியை ஏற்று, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை "சமத்துவ நாளாக" கொண் டாடிட வேண்டும்" என தலைமைக் கழகம் அறிவித் தற்கிணங்க,

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளினை முன் னிட்டு இன்று (ஏப்ரல் - 14) காலை 10.00 மணியளவில் கழக அமைப்புச் செயலா ளர் ஆர்.எஸ்.பாரதி அவர் கள் தலைமையில், செய்தித் தொடர்பு தலைவர் டி. கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செய லாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செய லாளர்கள் எஸ்.ஆஸ்டின், ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ., ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநா தன் மற்றும் கழக நிர்வாகிகள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரி யாதை செய்து "சமத்துவ நாள்" உறுதிமொழி ஏற் கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட் டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாநகர மன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள் ளுமாறு கேட்டுக் கொள்கி றேன்.

இவ்வாறு அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

ஊரக, பேரூராட்சி, நகரப் பகுதிகளில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும்

அங்கன்வாடி மையங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கட்டிடங்கள் கட்டித் தரப்படும்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கீதாஜீவன் தகவல்!

சென்னை, ஏப்.14 - சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வரு மாறு :-

அ.பண்ணாரி: பவானிசா கர் தொகுதியிலுள்ள சத்திய மங்கலம் ஒன்றியத்திற்குட் பட்ட இக்கரைநெகமம் ஊராட்சியில் மூலக்கடை என்னும் கிராமம் உள்ளது. இந்த ஊரிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலை வில் உள்ள கொளிஞ்சானூ ரில்தான் குழந்தைகள் மையம் உள்ளது. ஆகவே, மூலக்கடையில் புதிதாக குழந்தைகள் மையம் அமைத்தும், மாக்கினாங் கோம்பை ஊராட்சியி லுள்ள மங்கலப்புரத்திலும், சத்தியமங்கலம் நகராட்சியி லுள்ள தண்டு மாரியம்மன் கோயில் அன்னை வீதியி லும், பவானிசாகர் ஒன்றி யத்திற்குட்பட்ட பாச்சாம லனூர், தச்சுபெருமாள் வளையம், பொங்கம்பள்ளி, ஆலாம்பாளையம், நல்லூர் நேரு நகர் ஐயப்பன்கோ யில் வீதி, புங்கார் போன்ற பகுதிகளில் அங்கன்வாடி குழந்தைகள் மையம் செயல் பட்டு வருகின்றது. மேற் கண்ட ஒவ்வொரு மையத் திலும் 20 குழந்தைகளுக்கும் அதிகமாக உள்ளனர். இந்த மையங்கள் தனியார் கட்ட டங்களில்தான் இயங்கி வரு கின்றன. தனியார் கட்ட டத்தில் குழந்தைகளுக்கு போதுமான இட வசதி வாய்ப்புகள் இல்லை. ஆகவே, குழந்தைகளின்மீது அக்கறை கொண்டு மேற் கண்ட அங்கன்வாடி குழந் தைகள் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர அரசு முன்வருமா?

அமைச்சர் பி.கீதா ஜீவன்: நம்முடைய சத்தியமங்கலம் வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் வாடகைக் கட் டடத்தில் உள்ள மையங்க ளின் பட்டியல்களையெல் லாம் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ணாரி அவர்கள் இங்கு பட்டிய லிட்டார்கள். சத்தியமங்க லம் வட்டாரத்தில் தனியார் வாடகைக் கட்டடத்தில் 41 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, நிச்ச யமாக நம்முடைய மாண்பு மிகு உறுப்பினர் அவர்க ளின் கோரிக்கையின்படி வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் மையங்களுக் கெல்லாம் முன்னுரிமை அளித்து ஊரகப் பகுதியாக இருந்தாலும், பேரூராட்சி நகரப் பகுதியாக இருந்தா லும் கட்டித் தரப்படும்.

அ.பண்ணாரி: பவானிசா கர் ஒன்றியத்திற்குட்பட்ட தேசியம்பள்ளி ஊராட்சி, புங்கம்பள்ளி கிராமத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவல கம் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்ட அலுவலகத் தின் கட்டடமானது மிக வும் பழமையான கட்டடம் ஆகும். தாய்சேய், குழந்தை கள் அதிகம்பேர் வந்து செல் லுகின்ற இடமாக இந்த அலுவலகம் உள்ளதால் கரு ணையோடு பரிசீலனை செய்து, புதிதாக ஒருங்கி ணைந்த குழந்தைகள் வளர்ச் சித் திட்ட அலுவலகம் கட் டித் தர அரசு முன்வருமா?

அமைச்சர் பி.கீதா ஜீவன்: பவானிசாகர் வட்டாரத் திற்கு குழந்தைகள் வளர்ச் சித் திட்ட அலுவலகம் வேண்டுமென்று மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். நம்முடைய துறையின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து, இதுவரைக்கும் கட்டடம் கட்டித் தரப்படவில்லை. மழைக்காலங்களில் மிகவும் மோசமான நிலையில் இருக் கிறது என்று சட்டமன்ற உறுப்பினர் கூறுவதற்கேற்ப, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகவோ, பிற துறைகளின் மூலமா கவோ கட்டடம் கட்டுவ தற்கு அல்லது மாற்று கட்ட டத்தில் அதனை மாற்றிய மைப்பதற்கு இந்தத் துறை நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

இராணிப்பேட்டை மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி தலைமையில் நடந்த பொதுமக்கள் தாகம் தீர்க்கும் வகையில் குடிநீர் பந்தலை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட கழக அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, நகராட்சி தலைவர் சுஜாதா விநோத், மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் இசட்.அப்துல்லா மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பி.எல்.டி.சிவா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.விநோத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.